அசல்

ஆழ்22 சுவாமிநாதன்.

அசல் – 1

௧.

சிவமயம்.

கற்பகத்தார் போற்றுங் கடவுளடிகள்
கற்பகத்தார் நல்ல கழுமணியே – கற்பகத்தார்
மன்னர் மதிக்கு மதிநுட்ப மெய்ப்புலவ
மன்ன விதனை மதி.

ஸ்ரீமத் ஐயா அவர்களுக்கு எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

"சொல்லினுச்சொல்லின்முடிவினும் வேதச்சுருதியினு
மல்லினுமாசற்ற வாகாயந்தன்னினுமாய்ந்துவிட்டோ
ரில்லினு மன்பரிடத்தினுமீசனிருக்குமிடங்
கல்லினுஞ் செம்பினு மோவிருப்பா னெங்கள் கண்ணுதலே."

இச்செய்யுளிலே விக்கிரகாராதனை நீக்கப்பட்டதென்று ஒருவரும் நீக்கப்படவில்லையென்று மற்றொருவரும் கூறுகின்றனர்.

நீக்கப்பட்டதென்பதற்கு அவர் கூறும் பிரமாணம் இதிலவர் அவ்வாறு பொருள் கொண்டு வெளிப்படுத்தியிருக்கிறதே என்கின்றார்.

நீக்கப்படவில்லையென்பதற்கு மற்றவர் கூறும் பிரமாணம் "கங்கையாடிலென் காவிரியாடிலென் — கொங்குதண் குமரித்துறையாடிலென் — ஓங்குமாகட லோதநீராடிலென் — எங்குமீசனெனாதவர்க் கில்லையே."

அசல்

ஆய்22 சுவாமிநாதன்

அசல் – 1



என்பதும், சிவபெருமானுடைய இலக்கணங்களுள்
திருவுருவங்களும் ஒன்றாகக் கூறப்பட்டிருத்தலும்,
"எல்லாஞ் சிவமயமேயாம்" எனப் பட்டினத்தடி-
கள் கூறியருளியதும், "பார்க்கின்ற இடமெங்கும் நீ
க்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே" எனத் தாயு
மான சுவாமிகள் கூறியருளியதும், இன்னோரன்ன
பிறவும் விக்கிரகங்களும் சிவபிரான் உரு
என்பதைச் சாதித்தலான் இவைகளை எண்ணின்
றனர்.

இன்னும், இங்ஙனம் அடிகள் கூறியது கிரி
யைக் கற்சி யென்பார் உளராயின், ஞானிகட்குக்
கிரியையேன், "உறங்கிலேன் கையில் வெறும்பாக்கெனத்
தானே கழிதலன்றி விக்கிரகங்களில் கண்ணுதல்
இன்மைக் கூறும் சூட்டுணர்வு அவர்க்கிலக்கன்று
கலானும், சிவஞானபோதத்து இறுதிச் சூத்திரம்,
சீவன் முத்தராய சிவஞானிகட்கும் விக்கிரகாராதனை
வேண்டுமென விதந்து கூறுதலானும், அவ்வாறே
திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய சமயாசாரி
யர்களும் பிறரும் சரியைத் தொண்டு செய்தமை
பெரிய புராணமுதலியவற்றில் கூறப்படுதலானும்,
விக்கிரகங்களில் கண்ணுதல் இல்லையென்றால் அது
றிசப்பாராகலானும் அவர் கூற்றுப் பொருந்தா
தென்கின்றார்.

அசல்

ஆடி 22 சுவாமிநாதன்

அசல் - 1

இனி, "கல்வியைச் செம்மையோ லிசைப்பா னெங்கள் கண்ணுதலே" யென்று அடிகள் கூறியதன் கருத்தென்னையென்றால் அவ்வக்கிரகங்களில் மந்திர நமஸ்காரத்தின் பின்னன்றி முன் தயிலில் நெய்போல விளங்கியிருக்கவில்லை; சொல், சொல்லின்முடிவு, வேதசப்தத்தி குகிலயத்தின் மந்திர நமஸ்காரமின்றி இயல்பாகவே விளங்கியிருக்கின்றன என்பதும், இங்ஙனமிருத்தலான் இவ்விடங்கள் விசேடமுடையன வென்பதுமேயாம். என்று சொல்லுகின்றனர்.

இவ்வுரைத் தொடர்கள் நீக்கி ஆராய்ந்து தங்கள் கருத்தைத் தயைகூர்ந்து தெரிவிக்கும்படி பன்முறை வேண்டுகின்றேன்.

ஆடி௴ } இங்ஙனம்.
௨௨ உ } ஸ்வாமிநாதன்.

எனக்கு விலாசம்:-

ஸ்வாமிநாதன்
வயி. நாக. ராம. கடை.
அமராபதிபுதூர்.

[illegible]

அசல்

ஆழ்வி22 சுவாமிநாதன்.

அசன் -1

Pages 14-17.
த. க. Vol
'M'
Copied.